செ.வெ.எண்.12 நாள் : 04-09-2017

# செய்தி

## முன்னாள் படைவீரர்கள் மற்றும் விதவையர்களுக்கு ஈமக்கிரியை நிதியுதவி வழங்குதல்

தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து முன்னாள் படைவீரர்களின் இறப்பிற்கு வழங்கப்படும் ஈமச்சடங்கு நிதியுதவி 01.08.2017 முதல் ரூ.5,000/-லிருந்து ரூ.10,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் முன்னாள் படைவீரர்களின் விதவை காலமானால் நிதியுதவி ரூ.5,000/- வழங்கப்படவுள்ளது என்ற விவரம் அனைத்து முன்னாள் படைவீரர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வருடாந்திர பராமரிப்பு மானியம் பெறும் ஊனமுற்ற முன்னாள் படைவீரருக்கான வீட்டு வரிச்சலுகையாக ரூ.2,000/- வரை மீளப்பெறும் திட்டமும் தொடங்கப்பட்டுள்ளது. எனவே திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள்/சார்ந்தோர்கள் இச்சலுகையினை பயன்படுத்திக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தமது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

2/2

மாவட்ட ஆட்சித் தலைவர்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி